## புதிய பொது சுகாதார மருத்துவமாது (பொ.சு.ம - PHM) பிரிவுகளை நிறுவுவதற்கான வழிகாட்டல் வரைபு

குடும்ப சுகாதார நிகழ்ச்சி நிரலானது சுகாதார அமைப்பின் பல்வேறு மட்டங்களினூடாக அமுலாக்கப்படுவதுடன் அதன் மிகச் சிறியது பொ.சு.ம (PHM) பிரிவாக அமைவதுடன் இங்கு பல்வேறு சனத்தொகை மட்டத்திலான தலையீடுகள் அமுலாக்கப்படுகின்றன.

பொ.சு.ம (PHM) பிரிவுகள் அவ்வப்போது மீளாய்வு செய்யப்படுவது சேவை வழங்கலின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. புதிய பொ.சு.ம (PHM) பிரிவுகளின் அடையாளப்படுத்தலின் நோக்கமானது ஊழியர்களின் அதீத வினைத்திறனை உறுதிப்படுத்தி சமூகத்தால் பெற்றுக்கொள்ளப்படும் சேவையின் தரத்தை மேம்படுத்தல் ஆகும்.

இவ்வழிகாட்டியின் குறிக்கோள் ஆனது வழமையான சேவைகளின் குறைந்தபட்ச இடையூறுகளுடன் புதிய பொ.சு.ம (PHM) பிரிவுகளை அடையாங்கண்டு நிறுவுதலை நெறிப்படுத்தல் ஆகும்.

புதிய பொ.சு.ம (PHM) பிரிவுகளை வரையறுக்கும் செயல்முறையின் போது வழங்கப்பட்ட படிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

1. புதிய பொ.சு.ம (PHM) பிரிவு ஒன்றை அடையாளப்படுத்தல்

1.1 பொ.சு.ம (PHM) பிரிவுகளின் மீள் திருத்தம் தேவைப்பாட்டின் நிமித்தம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். பொ.சு.வை (MOH) தனது பொ.சு.ம (PHM) பிரிவுகளின் மீள் அடையாளப்படுத்தலை பொ.சு.ம (PHM) ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்ட மொத்த சனத்தொகையை குறைத்து சேவை வழங்கலின் மேம்பாட்டிற்காக முடிவு செய்யலாம்.

1.2 புதிய பிரிவுகளை அடையாளப்படுத்தலுக்கான நெறிமுறைகள்

ஒரு பொ.சு.ம (PHM) பிரிவின் சனத்தொகை அண்ணளவாக 3000 ஆக இருத்தல் வேண்டும். இச் சனத்தொகை அடர்த்தி, பூகோள நில அமைப்பு மற்றும் வடுப்படத்தக்க குழுக்களின் இருப்பு ஆகியவற்றுக்கு இணங்க சரிசெய்யப்பட வேண்டும். தொழில் நிலை பிரிவுகள் நிரப்பப்பட்ட உடனேயே ஒரு பொ.சு.ம (PHM) பிரிவுக்கான சனத்தொகை கிராமப்புறங்களில் 1500 ஆகவும் நகரப்புறங்களில் 2500 ஆகவும் குறைக்கப்படல் வேண்டும். (சுகாதார அமைச்சின் செயலாளரின் இலங்கையின் பொது சுகாதார சேவையில் சுகாதார தொழில் நிலைப் பிரிவுகளை தீர்மானிக்கும் நெறிமுறைகளின் வழிகாட்டல் FHB/DLR/GF/2012 ஐ பார்க்கவும்).